DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.103/12

Deposition of Witness: PW 4

Name காளிராஜ் Father's Name

Village Taluk

Caste Calling

Religion Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.09.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ஊஞ்சாம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பலசரக்கு கடை வைத்து வேலை செய்துவருகிறேன். கடந்த 1977 அல்லது 1980 வருடம் எனது தகப்பனார் ராமுசெட்டியார் என்னுடைய தாயார் வெள்ளிமலையம்மாளுக்கு ஊஞ்சாமபட்டி தென்புலத்தில் உள்ள 1 1/2 ஏக்கர் நிலத்தினை கிரயம் பெற்றார். அதன் சர்வேஎண். 186/2 பட்டா எண்.1574. அந்த நிலத்தை 2005ம் வருடம் மேற்படி 1 1/2 ஏக்கர் நிலத்தினை செல்லையா தேவர் என்பவருக்கு எனக்கும், எனது தங்கைகள் இருவரின் பிரதிநிதியாக இருந்து கிரயம் செய்து கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் வெள்ளிமலையம்மாள் பெயரில் உள்ள நிலஉடைமை பதிவேட்டு ஆவணம் தான். அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஒளிநகல் அசாஆ 2. என்னிடம் காட்டப்படுவது 10.10.1980ல் என் தாயார் வெள்ளிமலையம்மாள் பெயரில் உள்ள கிரய ஆவணம் ஜெராக்ஸ் அசாஆ.3.

7 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1980ல் என தாயார் பெயரில் சொத்து வாங்கும் போது நான் உடன் இருந்தேன். பட்டா எண். மேற்படி கிரய ஆவணத்தில் இல்லையென்றால் சர்வேஎண்.186 என்று காட்டப்பட்டிருக்கும் . உட்பிரிவு காட்டபடவில்லை என்றால் சரிதான். 1984ல் பட்டா வழங்கும் போது உட்பிரிவு காட்டப்பட்டது என்றால் சரிதான். முதன்முதலில் என் தாயார் பெயரில் கூட்டுபட்டா ஏற்பட்டு அதன்பின்பு தான் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். கூட்டுபட்டாவில் வெள்ளிமலையம்மாள், சுப்பையகுடும்பன், பழனிமாதாரி என்று பேர்கள் பெயர் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்தை வாங்கும் போது வில்லங்கம் பார்த்தேமா என்றால் என் அப்பாவை கேட்டால் தான் தெரியும். சர்வேஎண்.186ல் மொத்தம் 3 ஏக்கர் தென்பக்கம் 1 1/2 ஏக்கர் என்றாலும் அது தான் சர்வேஎண். 186/2 என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 1955லேயே சர்வேஎண்.186ல் கண்ட மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 1 1/2 ஏக்கரை சுப்பையன் குடும்பன் கிரயம் பெற்றுள்ளார் என்றால் தெரியாது. அதனால் தான் 1955லிருந்து 1984 வரை சுப்பையன் குடும்பன் பெயர் கூட்டுபட்டாவில் இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. சுப்பையன் குடும்பன் பெயரில் 1955 வருடம் கிரயம் பெறப்பட்டு அவர் பெயரில் கூட்டுபட்டா ஏறட்படிருந்ததை தான் எனது தாயார் மற்றும் தகப்பனாரும் மோசடியாக கிரயம் பெற்றுள்ளார்கள் என்றும் அதனை மறைப்பதற்காக திரும்ப , திரும்ப , கிரயம், தானம் போன்ற ஆணங்களை ஏற்படுத்தி குழப்பம் ஏற்படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. அசா3க்கு சாதமாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.